# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in


தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032
முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ),

************

மனு எண்: 375/2017/ஊராட்சி

ஆணை எண்: 060/2017

நாள்: 27/03/2017

திரு. எம் கணேசன் தலைவர் மற்றும், நிர்வாகிகள்,
தஞ்சை திருநகர் மக்கள் நல அமைப்பு,
88, ரோஜாத் தெரு, திருநகர், சீனிவாசபுரம் விரிவாக்கம்,
தஞ்சாவூர்.

– மனுதாரர்கள்

வட்டார வளர்ச்சி அலுவலர்,
தஞ்சாவூர் ஊராட்சி ஒன்றியம்,
தஞ்சாவூர்.

– எதிர் மனுதாரர்

## ஆணை

தஞ்சாவூர் மாவட்டம், சீனிவாசபுரம் விரிவாக்கம் திருநகரில் வசிக்கும், தஞ்சை–திருநகர் மக்கள் நல அமைப்பு சார்பாக திரு. எம். கணேசன், தலைவர் மற்றும் நிர்வாகிகள், அவர்களுடைய 15.03.2017 நாளிட்ட மனுவில் நீலகிரி ஊராட்சி, திருநகர் பகுதியில் மாநகராட்சியைப் போலவே அனைத்து வரிகளும் விதிக்கப்படுகின்றன என்றும், ஆனால் மக்கள் நலப் பணிகளான சாலை வசதி, குப்பை தொட்டிகள் அமைத்தல், தூய்மை பணிகள் மேற்கொள்ளுதல், கழிவு நீர் சாக்கடையில் தேங்கியிருப்பதை அகற்றி, கொசு உற்பத்தியை ஒழித்தல், மேல்நிலை நீர்தேக்க தொட்டியினை பராமரித்தல் போன்ற பணிகளை செய்ய வில்லை என்றும் தெரிவித்து, இச்சீர்கேடுகளை சரி செய்து அவர்கள் பகுதி மக்களின் வாழ்வை பாதுகாப்பானதாக செய்து தர கோரியுள்ளார்கள்.

2. 2014–ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டம், பிரிவு 2, உட்பிரிவு (7)ன்படி "உள்ளாட்சி அமைப்பு" என்பதற்கான பொருளில் "ஊராட்சி மன்றம்" மற்றும் "ஊராட்சி ஒன்றியம்" என்ற அமைப்புகள் வரையறுக்கப்படவில்லை. எனவே மனுதாரர் மனு மீது இம்முறைமன்ற நடுவத்தால் எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ள இயலாது. எனவே இம்மனுவினை மாவட்ட ஆட்சித் தலைவர், தஞ்சாவூர் மாவட்டம் அவர்களுக்கு தக்க நடவடிக்கைக்காக மேலனுப்ப முடிவு செய்யப்பட்டு, அவ்வாறே அனுப்பப்படுகிறது. மேலும் இப்பொருள் குறித்து தஞ்சாவூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களை அணுகுமாறு மனுதாரர்களுக்கு அறிவுறுத்தப்படுகிறது.

2017–ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 27–ஆம் நாளன்று என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையிட்டு இவ்வாணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

7/4/2017
செயலாளர்.

பெறுநர்

திரு. எம் கணேசன், தலைவர்,
தஞ்சை திருநகர் மக்கள் நல அமைப்பு,
88, ரோஜாத் தெரு, திருநகர், சீனிவாசபுரம் விரிவாக்கம்,
தஞ்சாவூர் - 9.

நகல்
மாவட்ட ஆட்சியர்,
தஞ்சாவூர் மாவட்டம்
தஞ்சாவூர்.